A. Abraham [illegible] Esq.
Jaffna College

# THE MORNING STAR.

Vol. 58. Jaffna, Thursday 3rd of Nov., 1898. No. 22.

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

*RECEIPTS FOR THE MORNING STAR*

| | | |
|---|---|---|
| | '98 | |
| Dickoya | Mr. C. Murugasar | 2.00 |
| Strait Settlements | Mr- Naganather | 2.25 |
| India | Mr. C. H. Cathiravelpillai | 2.00 |
| Karadive | Mr. P. Isaac | 2.00 |
| Kaits | Messrs T. M. Tampoe J. P. T. P. Olegasagarampillai | 3.00 |
| Batticotta | Rev. T. A. Elmer M. A. | 1.25 |
| Jaffna, Town | Messrs S. A. Alagakoen, Advocate Sandrasagaram and N. Sinnatamby | 4.50 |
| Manippay | Mr. N. Lyman | 1,25 |
| Batticotta | Mr S Beadle | 1,25 |
| | '97 | |
| Straits Settlements | Mr. A. Nagamather | 2.25 |
| Jaffna, Town | Mr J. K. Chanmugam B. A. | 1.50 |
| Batticotta | Prof. W E Hitchcock M A | 1.25 |

## Gentlemen,

Please remit all dues for Star as early as possible.

THE CEYLON STEAMSHIP Co. Ltd.



The Company's Steamer "Lady Havelock" is appointed to sail from Kankesanturai to Colombo Via Paumben on Nov. 9th and 23rd.

The Steamer "Lady Gordon" will sail for Colombo from Kankesanturai via Pt. Pedro on the Nov. 11th. and 25th.

W. MATHER & SON, Agents

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

Bankers and Commission Agents.

The company opens current accounts with sums of not less than Rs. 100 00 and interest allowed at 2 per cent per annum on minimum monthly balances of Rs 500.00 and upwards. Fixed deposits received for 3- 6 and 12 months and interest allowed at 3, 5 and 6 per cent per annum respectively.

Remittances both by wire and Draft made to and from Colombo Colombo Bankers-National Bank of India Ltd

Cheques and Foreign drafts and bill of exchange on the Colombo Banks cashed.

For sale at the Store Department

Grey shirtings. Mulls, Jacconettes, Chintz of different kinds, Umbrellas, Hosiery. Boots, shoes and harness. Waterbury watches, Printing paper, Swans Fountain Pens &c &c.

WILLIAM MATHER.
Manging Director

NOTICE.

The Manager "Morning Star" has undertaken to order text books &c for Schools and Colleges. Apply, Batticotta, Jaffna.

NOTICE.

Giants Tank Works.

Earthwork contracts, in connection with the above works near Murungan, will be given shortly. For rates and other particulars please apply to:...

T. M. CHAPMAN
Murungan
Mannar

Established for over 60 years.

## MANIPPAY PRESS.

## Strong & Asbury, Printers.

Printing work of every kind neatly and promptly executed on moderate terms.

We undertake illustrated work of every kind. Portraits views, maps, plans &c. engraved and inserted in blocks &c.

Orders can be addressed to Mr. S. K. LAWTON, Manippay.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 932.

In the matter of the estate of the late Vallipillai daughter of Ayampillai Murukar of Sarasalai Deceased.

1. Sampanther Chinniah and wife
2. Chinnapillai of Sarasalai Petitioners.

Vs

1 Kartikesar Velauther and
2. Velauther Arunasalam of Sarasalai Respondents.

This matter of the Petition of Sampanther Chinniah and wife Chinnapillai of Sarasalai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Vallipillai daughter of Ayampillai Murukar coming on for disposal befofe C. Eaidly Wilmot, Esquire, Dstrict Judge,, on the 24th day of October 1898 in the presence of Mr. Tambiah S. Cooke, Proctor on the part of the Petitioners, and the affidavit of the Petitioners dated the day of October 1898 having been read, it is declared that the Petitioners are the son-in law and daughter of the said intestate and are entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to them unless the Respondents or any other person shall on or before the 6th day of December 1898 shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 31st day of October 1898. C. E. WILMOT, District Judge.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } No 806

In the matter of the estate of the late Kanakasapai Chuperamaniar of Chirupitty Decased

Ramalingam Mailvakanam of Chirupitty Petitioner.

Vs

Parupathipillai widow of Chuperamaniar of Chirupitty Respondent.

This matter of the Petition of Ramalinkam Mailvakanam of Chirupitty praying for fresh grant of Letters of Administration to the estate of the abovenamed deceased Kanakasapai Chuperamaniar coming on for disposal before C. Eardley Wilmot Esquire, District Judge on the 24th day of October 1898 in the presence of Mr. Tambiah S. Cooke, Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the day of October 1898 having been read, it is declared that the Petitioner is the brother-in-law of the said intestate and is entitled to have fresh grant of Letters of Administration to the estate of the said intestate issued to him unless the Respondents or any other pesson shall on or before the 6th day of December 1898 shew sufficient cause to the satisfaction of the Court to the contrary.

Signed this 31st day of October 1868. C. E. WILMOT, District Judge.

## Local & General.

**A Russian canal** Russia proposes to make a canal connecting the Black Sea with the Baltic so that her fleet may be concentrated at either end in a week's time The entire length will be about 1800 miles but only 125 miles will need to be artificial as rivers can be used for the rest. It is estimated that the time required will be four years and the expense $97,000,000

—Of the 700,00 post offices in the United States about 7000 are in charge of women.

—**Spain's war expenses** The total cost of the war to spain is estimated to be over £100,000,000 sterling

**A bright saying** "Evangelization without education means evaporation, but evangelization with education is emancipation"

**Plague**. We notice with not a little apprehension the spread of the plague in Bangalore. As this pestilence gradually comes nearer to us increasing vigilence on the part of our Port Surgeons will be reguired One case is reported from Trichinopoly The people of Southern India are in consequence much alarmed

**Clerical Examination**. The examination for candidates wishing to enter the clerical branch of the Government service, will be held on the 28th inst. The centres for the examination will be Colombo. Kandy. Jaffna, Galle, Batticaloa, Anuradhapura and Badulla.

**Personal items**. Mr. T. M. Tampoo has resumed his duties as Crown Proctor, and his presence as the Bar table is very welcome to suitors.

Mr. C. Strantenburgh had a nasty fall from his rickshow and has been confined to his room for a couple of weeks. He has recovered from the effects of the accident but he is not well enough to attend Court.

Mr. B. Satrukulsingam has been slightly indisposed for a few weeks and he is not quite in fit state of health to attend to his work in the Courts.

Our Office Assistant Mr. J. H. Leak was married at Matara on the 24th ultimo to Miss. Forbes.

Mr. C. Arunachchalam, District Engineer Passara arrived by the "Lady Havelock" on the 25th ultimo via Trincomalie and left on the 28th ultimo by "Lady Gordon to Batticaloa to his station at Pasara.

Our District Judge Mr. Wilmot will go to Mullaitive on or abont the 26th inst. to try a criminal case. and Mr. T. C. Changarapillai will be specially authorized to represent the Crown to prosecute the case.

**Burgalary**. A cloth boutique at the Grand Bazaar belonging to a Bombay trader, was broken open on the night of the 31st ultimo and many valuable cloths were stolen. No trace of the theft has been as yet found out. It is indeed surprising that no safety is to be found at the hands of the police department here when two Constables are always expected to be on beat at both the terminal junctions of the road that passes through the row of boutiques.

**Orbituary**. We are sorry to record the death of Mr. Handy of the Forest Department at Matale on the 27th ultimo. The deceased was the brother of Rev. C. Handy of "St. John's College"

On the 23rd ultimo Ponnammah wife of Mr. Muttukumaru died at child birth at Jaffna. The deceased is the grand daughter of the late Mr. William Nevins of Batticotta.

**The Legislative council**. The 1898—1899, Sessions of the Legislative Council will be opened by His Excellency the Governor on Monday the 7th inst. at 3 p. m. The opening speech of the Governor is calculated to be very interesting to all and many subjects of importance will be dealt with by him.

**Marriage**. On Monday the 31st. ultimo Mr. Francis shroff of the Customs, Point Pedro, was married to Miss E. Manuelpillai Rajakarier. The festivities conduted on a grand scale. Several officers, wellwishers of the bride and bridgroom's party who are both influential townsmen of Jaffna, attended the wedding. We wish, the new couple long life and happiness.

**P. W. D. Jaffna**. Mr. Macdonald the new Provincial Engineer has arrived and assumed duties there replacing Mr. Grant who had been transferred to another station.

LITERACY AND ILLITERACY IN INDIA.

Some people revel in statistics, and arrive at results from which they derive both instruction and a handle for moralising. Whether the following results are instructive may be left to those concerned to consider. The census of 1891, which showed the population of British India as 261,838,926, demonstrated the further fact that of this total 15,292,750 or 5.85 per cent were receiving or had received education, and that 246,546,176 or 94.15 per cent were illiterate. There is nothing of a startling nature in this. But bringing these figures side by side with those relating to Jails published annually by the Government, it is found that of the total number of convicts in the prisons in British India, namely 178,034 (this being the average of the last three years), those classed as literate numbered 25,430 or 16 per cent of the total population of that class, while the illiterate numbered 152,604 or only 06 of the latter class. In other words the number of literate persons imprisond on conviction is proportionately more than twice as large as the illiterate falling in the same misfortune. The moral then is that literacy so far has not helped the people to discriminate between right and wrong, and takes them much oftener wrong than does illiteracy. Does this arise from the education imparted to the people—an education which, while awakening their wits, fails to give them direction and breaking down conservatism, and caste and religious restrictions, substitutes nothing instead! Turning, by the way, to the figures of the progress of education, and taking an average of the results of the last ten years it is found that out of nearly four millions of scholars in public and private institutions in British India, an infinitessimal fraction go beyond the elementary courses: only five thousand one hundred on the average passing annually as graduates and undergraduates. Detailing the figures into provinces it is found that Bengal, with one and a half million students, registers, 1,560 graduates and undergraduates, while the Madras Presidency. with less than half that number of students (685 973), registers a greater number of successes, 1,783 graduates and undergraduates. The Bombay Presidency too seems to be better in the results than Bengal, namely 635,509 students and 848 successes. It is instructive to glance at the special courses which find favour in the provinces: in the North-Western Provinces and Oudh and the Panjab it is oriental languages and literature, while in Bengal, Madras. and Bombay it is law and medicine. And what do the remaining three millions nine hundred and ninty-five thousand students who do not go above the elementary classes do? Is it they who contribute to the larger percentage above the illiterate in the jails? The question seems of so much importance that we call attention to the matter. Representative men can do worse than study the satistical publications of the Government, for therein lie buried masses of instructive information on many subjects. We noticed a few days ago figures relating to litigation and the consequent drain on the resources of the people. Previously we drew attention to the forms of disease most prevalent. And here is now this matter of literacy and conviction.—*Englishman*, Oct. 6,

## FOREIGN NEWS.

**China** A French missionary and his native converts have been murdered by the populace at Paklung. France has demanded reparation and threatens action if China fails to guarantee the lives of French missionaries.

**France** The tide of feeling is rising very high against England on account of the dispute about Fashoda The massing of troops at Toulon would suggest that France even contemplates war with England While independent Frenchmen say that the issue is of far too insignificant a nature to embroil the two nations in war yet the ministry of France is very highly exited. It look almost as if, to divert the attention of the people from the charges made against the army in the Dreyfis case, France would risk a war with England. It is sincerely to be hoped that a peaceful settlement of the dispute may yet be arrived at.

**Germany** The Emperor in his tour in the Levant has reached Constantinople where he has been feted by the Sultan of Turkey Some uneasiness exists on the part of France and Russia as to the purport of the Emperor's visit to the Holy Land That part of the proposed trip which included a visit to Egypt has been omitted

**Crete** The Sultan of Turkey has agreed to the ultimatum sent by the Powers to the effect that the entire Turkish Garrison must be deported from Crete.

*Later*: Rumors are gaining strength that an unconditional evacuation of Fashoda is imminent.

# உதயதாரகை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

இஅம் புத்தகம்.] யாழ்ப்பாணம், கஅகூஅம் ஞு கார்த்திகை மீ ௰ ௨ வியாழக்கிழமை. [சங்கியை, உஉ



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனி (லிமிற்றெட்)

"லேடிஅவலக்" புகைக்கப்பல் பின்வரும் தேதிகளில யாழ்ப்பாணத்திலிருந்து பாம்பன்வழியாய்க் கொழும்புக்குப்போக இருக்கின்றது. 1898 ம் ஞு கார்த்திகை மீ 9 உ, 23 உ.

"லேடிகோடன்" புகைக்கப்பல் பின்வரும்தேதிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைவழியாய்க் கொழும்புக்குப்போகஇருக்கின்றது.

1898 ம் ஞு கார்த்திகை மீ 11 உ, 25 உ.

W^m MATHER, & SON. Agents.

## யாழ்ப்பாண வியாபார சமுதாயம்.

இச்சமுதாயத்தவரிடம் பின்னுற் சொல்லப்படும் சாமான்கள் விற்பனவுக்கிருக்கின்றன.

சட்டைகள் தொப்பிகள் ரவிக்கைகளுக்கேற்றதும், பலவித பூக்களுள்ளதுமான நேர்த்தியான வெல்வெற்.

வெள்ளை, பச்சை, ரோசாப்பூ நிறங்கொண்ட உயர்ந்த பட்டுவகைகள்.

ஆண்கள் பெண்களுக்கேற்ற கால்மேசு சப்பாத்துகள்.

சட்டைகளுக்கேற்றமுதற்றரமானகன்னைனூர்ச்சீலைகள்.

காரிக்கன், சல்லைமல், கோடிமல், என்னும் பலதிறப்புடவைகள்.

நேர்த்தியான சீத்தைப்புடைவைகள்.

வாட்டர்பரி, நாழிகைவட்டங்கள். வெள்ளை உட்சட்டைகள். வனியன்சட்டைகள்.

வெள்ளைச் சரிகைச்சேலைகள், பலதினுசான சரிகைச்சால்வைகள்.

கடதாசி, பேனை, பென்சில், மைமுதலிய எழுத்துச்சாமான்கள்.

---

அறிவித்தல்.

### இராட்ஷதகுளம் அல்லது கட்டுக்கரை.

மேற்சொல்லப்பட்ட குளத்தைச் சேர்ந்த மண்வேலை மன்னுரிலிருந்து பதினுலாங்கட்டை முருங்கனுக்குக் கிட்டவாக ஒப்பந்தமாகக் கொடுக்கப்படும். இவ்வேலையின்விபரங்களை யறியவிரும்புகிறவர்கள் இதன் கீழ்க் கையொப்பமிடுபவரிடம் அறிந்துகொள்ளலாம்.

தி. எச். சப்மென். முருங்கன், மன்னுர்.

---

விளம்பரம்.

சகலரும் அறியவேண்டியது: கஅகூஅ ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ௬௯ ந் திகதியைக்கொண்ட இந்துசாதனம் முதல் அடுத்தடுத்து; சி. சுப்பிரமணியம், க. காசிநாதன் என்னும் இருவர்களும் வெளிப்படுத்திய விளம்பரம் முழுதும் அபத்தமும் பொய்யுமுள்ளது. எங்களில் ச. அருணசலம் பள்ளிக்கூட விருத்திக்குப் பணஞ்சேகரித்துப் பள்ளிக்கூடவிருத்திக்கே செலவு செய்திருக்கிருர். சொயபாவிப்புக்கு எடுக்கவில்லை. க. காசிநாதன் நியாசதாரியல்ல. இரண்டுநியாசதாரிகளாகிய எங்களுடையசம்மதியின்றி, சி. சுப்பிரமணியம், ஆ. அம்பலவாணரை நியாசதாரியாக நியமிக்கயாதொரு அதிகாரமும் உரித்தும் இல்லையென்பதே.

இங்ஙனம், காரை. கா. சிவசிதம்பரஐயர்.

ச. அருணசலம்.

3, 11, 98. சு. ம. வி. நியாசதாரிகள்.


---

## உதயதாரகை.

### கஅகூஅம் ஞு கார்த்திகை மீ ௰ ௨.

### இங்கிலந்தும் பிரான்சும்.
England and France.

சென்ற இரண்டுமூன்று வாரங்களுக்கிடையில் நடைபெற்ற சங்கதிகளைப்பார்க்கும்போது, நெப்போலியனுடைய யுத்தங்களின்பின் ஏறக்குறைய எண்பது வருடங்களாய் யுத்தமில்லாதிருந்த அங்கிலோபிரான்சியர் இப்போது முட்டிக்கொள்ளல் கூடுமோவென யாரும் ஆலோசித்தற்கிடமிருக்கின்றது. எகிப்திய சூடானிலிருந்து கலகம்விளைக்கும்டேவிஷரை அங்கிலோ எகிப்தியசேனையானது முனைமுகத்திற் சந்தித்துத் தோற்கடித்து நயில்நதி நெடுக அதன் ஊற்றிடங்களை நோக்கிச் செல்லும்போது வழியிற் பாஷோடா என்னுமிடத்தில் மேஜர் மார்ச்சான்டின்கீழ் ஓர் சிறிய பிரான்சியசேனை நின்றதும், அங்கிலோ சேனுபதியாகிய சேர் கிச்செனர் அவ்விடத்தில் அங்கிலோ எகிப்திய கொடிகளை உயர்த்தி மேஜர் மார்ச்சாண்டை அவ்விடம்விட்டுவிலகும்படிகேட்க அவர் பாரிஸ்நகரத்திலிருந்து உத்தரவுவந்தபின்பே அப்படிச் செய்வேனெனக் கூறியதும் புதினுபேட்சிகள் ஞாபகத்திலிருக்கும். இப்போது பிரான்சியர்,கப்பல்போக்குவரவுசெய்யக்கூடிய நயில்நதிப்பாகத்திற் தமக்குமோரிடம் வேண்டுமென்றும், நயில்நதியின்மேல் வர்த்தகம்செய்வதற்குத்தமக்குமுரித்துண்டென்றுங் கூறுகின்றனர். இச்செய்தியைத் தமது தானுபதிமூலமாய் இங்கிலந்தின் மந்திரியாகிய சலிஸ்புரிபெருமானுக்குப் பிரான்சியரனுப்பியபோது தம்சேனைகளையும் யுத்தத்துக்காயத்தமாயிருக்கும்படி கட்டளைபண்ணினர், லீவுகொடுத்திருந்த சேனுபதிகளை யுடனே வேலைக்குவரும்படியழைத்தனர். அலன், பிறெஸ்ற் என்னும் பிரான்சியபோர்க்கப்பற்துறைமுகங்களில்யுத்தக்கப்பல்களுக்குக் கரிபோட்டுப் புகையேற்றிச் சோதனைபார்த்தனர். கப்பல்களுக்கு வேண்டிய ஆட்களும் முஸ்தீதுகளும் நிரப்பும்படியும்கட்டளைபிறந்தது.பிரான்சியரின் கேள்விகளைத் தானுபதி சலிஸ்புரிபெருமானுக் கறிவிக்க அவர் இதுவிஷயத்தில் நியாயம்பேசஇடமில்லையென மறுத்ததோடு நீர்க்கீழ்ச்சென்று தோப்பிடோ என்னும் யுத்தமரக்கலங்களையுடைக்கும் 18 புதிய சங்காரவள்ளங்களுக்குக்கட்டளைபண், ஒருங்குசேர்ந்து நேர்பார்க்கிறதற்காயத்தமாயிருக்கும்படி ஆங்காங்குள்ள யுத்தமரக்கலஸ்தானங்களுக்கும் செய்தியனுப்பினர். திருக்கோணமலையிலுள்ளஉபதளபதி அட்மைறல் டோக்லஸ் அவர்களுக்கும் கொழும்புக்கூடாய் மற்றோர் விளங்கக்கூடாத குறிப்புப்பாஷையில் ஓர் செய்தி அனுப்பப்பட்டது. திருக்கோணமலையிலிருந்த "இக்லிப்ஸ்" என்னும் யுத்தக்கப்பல் உடனே கொழும்புத்துறைமுகத்துக்குப்போகும்படி உத்தரவுபிறந்தது. ஆங்குநின்ற பிரான்சியகப்பல்கள் இருபத்துநாலுமணித்தியாலத்துள்வெளிப்படவேண்டுமெனக் கட்டளைசெய்யப்பட்டது.

இக்குறிப்புகளே இவ்விருசாதியாரும் முட்டிக்கொள்ளப்போகின்றனரோவென யாரும் அயிர்த்தற்குக் காரணங்களாயிருக்கின்றன. பிரான்சிலுள்ள பத்திரிகைகள் விடுவமோவெனத்தோள்தட்டி வீரம்பேசுகின்றன. சலிஸ்புரிபெருமான் இதுவிஷயத்திற் பிரான்சியர்க்கிடங்கொடுப்பரேல் அவருடையமந்திரித்துவம் பதிபோவது திண்ணமென அங்கிலோ பிரசைகளின் மனக்கிடக்கைகளையறிந்த ஒருவர் லண்டோம்பட்டினத்திலிருந்து எழுதுகின்றார். ருஷிய மந்திரியொருவர் பாரிஸ்நகர்சென்று பிரான்சிய ராசாங்கத்தவரைச்சந்தித்து ஆலோசனைகள்செய்து இப்போது அவுஸ்திரியதலைநகரிசென்றிருக்கிருர். ருஷியர் சீனுவின்விஷயத்தில் அங்கிலேயரோடு தாம் எதிரிடைபண்ணிக்கொண்டு எகிப்தின்விஷயத்தில் எதிரிடைசெய்யும்படி பிரான்சியரைக் கிள்ளிவிடுகின்றனர் போலும். அங்கிலோபிரான்சியர் தனித்து யுத்தஞ்செய்யின் பிரான்சியகப்பற்சேனை அங்கிலேய கப்பற்கூட்டங்களின்முன் காற்றெதிர்ப்பஞ்சுபோற் பறக்கவேண்டியதாகும். பிரான்சியதரைச்சேனை அங்கிலோதரைச்சேனையிலும் மிகப்பெரிதென்பது மெய்யாயினும் அங்கிலோயுத்தமரக்கலங்கள் பிரான்சைவளைந்து துறைமுகங்களைச் சாடினுற் பிரான்சியசேனை வெளிப்படும்வகையேது. ருஷியர் பிரான்சியர்க்குத் துணைசெல்லுங்கால் அமெரிக்கர் அங்கிலேயரைத் தனிக்கவிடாரென எண்ண இடமிருக்கின்றது. கலனிகளின்இராசமாலிகிதராகிய மெஸ். சேம்பளேன் தமது மனைவியின் சென்னதேசமாகிய ஐக்கியதேசஞ்சென்று ஓரேசாதியாராகிய அங்கிலோஅமரிக்கர் பந்துக்கட்டுச்செய்துகொள்ளவேண்டியதவசியமெனஉபந்நியாசங்கள்செய்கின்றனர். ருஷியரைவிடப் பிரான்சியரோடுவேறுயார்சேர்ந்துகொள்வாரோ தெரியாது. ஜேர்மனிய, இத்தாலிய, யாப்பானியர் பிரான்சர்க்குதவிபோகாரென்பது திண்ணம்.

காரியநிருவாகங்களிப்படியிருப்பினும் அறிவுமிகுத்த இக்காலத்திலே கூடியமட்டும் இரத்தஞ்சிந்துதலின்றிக் காரியங்களைத் தீர்த்துக்கொள்வது பெரியோரின்விருப்பமாயிருத்தலினுலும் லண்டோம்பட்டினத்தில் இருக்கும் பிரான்சியதானுபதி அதியோக்கியரும் அங்கிலேயரில் நன்மனமுள்ளவருமாகையாலும் சமாதானமாய்க் காரியம்முடியுமெனக் காத்திருக்கலாம்.

---

### அரசிறைவருமானமும் வரியும்.
Revenue of Taxes.

சிலவருடங்களாய் இலங்கையின் அரசிறைவருமானம் செலவுக்குவேண்டிய தொகையிலும் பார்க்கக் கூடிவருகிறதென்றும் கஅகூஅ ம் ஆண்டிலும் இருபத்தைந்து இலட்சத்துக்கு மேற்பட மிச்சம் வரக்கூடுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றதென்றும் இப்படியிருத்தலினுற் பிரசைகட்குப் பாரமாயிருக்குமோர் வரி நீக்கப்படுதற் கிடமிருக்கின்றதென்றுஞ் சென்ற சங்கியையிற் கூறினேம். அப்படியாயின் முதலாவதாய் நீக்கப்படவேண்டிய வரியாதென ஆராய்வோம். இராசாங்க பொக்கிஷசாலை நிரம்பி வழிகின்றமையாற் சனங்களின் உணவுக்கு அகத்தியந்தேவையானதாய்ப் பிறவூரிலிருந்து இவ்வூரிலிறக்கப்படும் நெல்லரிசியின்மேல் அறவிடப்படும் தீர்வையே முதலாவதாய் நீக்கப்படல்வேண்டுமெனச் சிலர் கூறுகின்றனர், நெல்லரிசித்தீர்வையால் இலங்கை அரசாட்சிக்கு வருடவீதம் ஏறக்குறைய முப்பதிலட்சம் ரூபாய் வருமானம் வருகின்றது. இத்தொகைப்பணம அரசிறைவருமானத்திலிருந்து மிஞ்சக்கூடுமென மதிக்கப்பட்டதொகையிலும்பார்க்கக் கூடியதாகையால் அரசாட்சியார் இவ்வரியிற் கைவைக்கமாட்டாரெனபதும் அப்படிக் கைவைக்குங்கால், தேச உயர்ச்சிக்காய்ச் செய்யப்படவேண்டிய நற்கிருத்தியங்கள் சிலவற்றைச்செய்யவியலாது அரசாட்சியார்முட்டுப்படவேண்டி வருமென்பதுந்தெளிவு. இவ்வளவாய் வருமானங் குறைக்கப்படுமேல் வடமாகாணப் புகைவீதியும் நெடுங்காலத்துக்கு முற்றுப்பெருதிருக்க வேண்டியதாகும்.

பின்னை அரசினர் தமது செலவுக்குந் தட்டுப்பாடின்றிப் பிரசைகட்குக் கொடுக்கக் கூடிய சுகம் யாது? தெருவரியெனப்படுந் தலைவரியை நீக்குவதேயாம். சிலவருடங்களின்முன் நீக்கப்பட்ட சிறுதானியக்குத்தகை நெல்லுக்குத்தகைகளால் இத்தீவின் வறிய சனங்கள் எவ்வளவு இடைஞ்சல்களை யனுபவித்தார்களோ ஏறக்குறைய அவ்வளவு கஷ்டங்களைத் தலைவரியாலும் அனுபவிக்கின்றனரெனலாம். பெரியவன, சிறியவன, செல்வன், வறிஞன் உத்தியோகஸ்தன் ஏழையென்னும் பேதமின்றி யெல்லோரிடத்தும் ஒரேவீதமாய் அறவிடப்படுவதாகிய இத்தலைவரியொத்த வரி சற்றுவது அறிவும் திருத்தமுமுள்ள வேறெத்தேசத்திலுமில்லையாமே. எல்லாச் சனங்களின் நன்மைக்குமாய் தெருக்கள் செப்பனிடுவதற்காகவே இவ்வரியேற்பட்டதென்பர். ஆனுற் தெருக்களுக்காய்ச் செலவிடப்படுந் தொகையோடு தலைவரியால் அறவிடப்படுந் தொகையை யொப்பிடும்போது மிக அற்பமாயிருக்கின்றது. பெருமுழுவதுந் தமதேயென்பார்போல் அசுவரதாரூடராய்ச் சவாரிபோகும் துரைமக்களிடத்தும் கான்வழியாய் அஞ்சியொதுங்கிச் செல்லும் பாதசாரிகளிடத்தும் ஒரே சரியாய் வரியறவிடல் நீதியாகுமா? இவ்வரியறவிடப்படும்போது ஏழைகள் படுந்துயரெவ்வளவு? வரிக்குப்பதிலாய் ஆறுநாட் தெருவேலை செய்தாற்போதுமென்பது கட்டளைச்சட்டமாயினும் தண்டற்காரரோ ஏழைகளை அப்படியும் இப்படியும்வருத்தி ஒற்றைவரி இரட்டைவரியாய்ப் பணமே யறவிடுகினறனர். அப்படிப் பணங்கொடாதார் அதிபாதகரான குற்றவாளிகளடையும் மறியலூழியத்தண்டனை யனுபவிக்கின்றனர்.

ஆகவே இவ்வரியை அழித்து அதற்குப்பதிலாய் நீதியானவோர் வரியேற்படுத்தலும் குற்றமாகாது. ஏழைப்பிரசைகட்கு இவ்வளவு கஷ்டத்தை யுண்டாக்கி யறவிடுந்தொகைதானெவ்வளவு. ஏழுலட்சம்மாத்திரம். இதிலும் நாலிலொருபங்குக்குமேற்பட அதாவது ஏறக்குறைய இரண்டிலட்சம் இவ்வரியறவிடுதற்காய்ச் செலவுசெய்யப்படுகின்றது. பின்னை இதனுலரசாட்சியார்க்கு வரும் உண்மையான வருமானம் ஐந்துலட்சமேயாம். இது இவ்வருடத்தில் மிச்சமாய் வரக்கூடுமென மதிப்பிடப்பட்டிருக்குந் தொகையினை ஐந்திலொருபாகமே. ஆகவே அரசாட்சியார் தமக்கு முட்டுப்பாடின்றி இவ்வரியை நீக்கிவிடுதல் கூடியகாரியமாயிருக்கின்றது. கொத்துக்கணக்காய் அல்லது பறைக்கணக்காய் நெல்லரிசிவாங்கிச் செலவுசெய்யும் வறிய சனங்கள் தலைவரியைப்போல்நெல்வரியை அதிபாரமாயுணரமாட்டார்.அவரவர்செலவுசெய்யும்நெல்லரிசியினளவுக்குத்தக்கதாய் நெல்வரியானது வறிஞர்மேலுஞ் செல்வர்மேலும் வித்தியாசமானவீதமாய்ப் பொறுக்கின்றமையாற் தலைவரிபோல அநியாயமானதன்று. பிறவூரிலிருந்து வரும் நெல்லுக்குத் தீர்வையிடுவது உள்ளூரிற் கமத்தொழில் விர்த்தியாவதற்கும் வறிய கமக்காரர் தம்முயற்சியினுல் நல்வருமானஞ் செய்தற்கும் ஏதுவாகின்றது. நெற்றீர்வை நீக்கப்படல்வேண்டுமென்பார் பிறவூரிலிருந்து வரும் புடவைகள் சரக்குவகைகளின் தீர்வையும நீக்கப்படல்வேண்டுமென்பாரோ. அப்படியாயின் தேசநன்மைக்காயிருக்கும் அரசாட்சிநடைபெறும்வாறெங்ஙன்? நெல்வரி நீக்கப்படின் பிரசைகட்கு நயமுண்டாகுமென்பது சரியே. ஆயினும் தலைவரியே முதலாவதாய் நீக்கப்படல்வேண்டுமென்பதும் அதுவே அரசாட்சியார் தமக்கு முட்டுப்பாடின்றிச் செய்யக்கூடியதென்பதும் எமது சித்தாந்தம்.

---

### வாலிபர்சங்கங்களின் சேபவாரம்.
Week of Prayer of Y. M. C. A's.

உலகமெங்குமுள்ள வாலிபர் சங்கங்களின் மத்தியகாரியஸ்தர் ஜெனிவாநகரத்திலிருந்து இவ்வாண்டின் வாலிபசங்க பிரார்த்தனைவார ஒழுங்கை அனுப்பி, யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு வாலிபர் சங்கத்திலும் இந்தமாதம் 13 ந் திகதிதுவக்கம் 19 ந் திகதி முடிய அவ்வொழுங்குப்படி ஆராதனை நடத்தும்படி கேட்டிருக்கின்றனர், முழுவாரத்தினதும் பீடிகை விஷயம் "கிறிஸ்துவைப்போலிருத்தல்".

கார். கங ந் உ ஞாயிறு. வாலிபர்சங்கவிருத்தியைச் சுட்டி வாலிபருக்கு விசேஷ பிரசங்கம். (மாற்கு ௬, கங-கரு; யோவான் கடு, கூ-கஎ; உ திமோ. க, ரு-கஉ)

கச ந் உ திங்கள், செபஞ்செய்வதில்கிறிஸ்துவைப் போலிருத்தல். (லூக். கக, க.)

கரு ந் உ செவ்வாய். தேவனேடு சகவாசம் செய்வதில்கிறிஸ்துவைப்போலிருத்தல். யோவான் கசு, ௬உ; கஎ, உக;)

கசு ந் உ புதன். உலகத்திலிருந்து பிரிந்திருத்தலில் கிறிஸ்துவைப்போலிருத்தல். (யோவான் கஎ, கசு;)

கஎ ந் உ வியாழம். சகோதர அன்பில் கிறிஸ்துவைப்போலிருத்தல். (யோவான் கடு, கஉ; உ கொரி. க௬, கக; க யோவான் உ, ரு-கக;)

கஅ ந் உ வெள்ளி. உலகத்தாரிலன்புகூர்தலில் கிறிஸ்துவைப்போலிருத்தல். (மத். ௬, கூசு; யோவான் உ௦, உக;)

ககூ ந் உ சனி. தேவனுக்கு ஒப்புக்கொடுத்தலில் கிறிஸ்துவைப்போலிருத்தல். (எபி. க௦, எ;)

உலகத்திலேயுள்ள வாலிபரின் நன்மையை விரும்பும் யாவரும் அவர்கள் விஷயத்திற் தேவன் செய்த பெரிய காரியங்களுக்காக அவர்க்குத் துதி செலுத்துவதும், இன்னும் அதிகமான பலன்களைப் பெறும்படி தாழ்மையோடுசெபிப்பதும் கடமையாகின்றது. "பாலனே விருத்தன் தந்தை" யென்பது ஆங்கிலேய பழமொழி, பிள்ளைகள் தம் இளமைப் பிராயத்தில் எவ்வகையினராய்ப் பயிலுகிருர்களோ மனுஷராகும்பொழுதும் அவ்வகையினராகவே யிருப்பரென்பது அனுபவசாட்சியாகையால் அவர்களிளமையிலேயே கிறிஸ்து இரட்சகரின் தொண்டராவது எவ்வளவு பாக்கியமான காரியமாயிருக்கும்.

## யாழ்ப்பாணம்

**காலநிலை.—Weather.**—ஊரெங்கும் நல்லமழை பெய்தது, பெய்கின்றது. கமக்காருள்ளங் களிகொள்ளுகின்றது. சென்றவருடங்களிற் பார்க்க இவ்வருடம் வேளாண்மை பொதுப்படநயப்படும்போலும்.

**கிளேறிக்கல்.—Clerical Ex.**—இலங்கை அரசாட்சியாரால் இந்தமாதம் உஅ ந் திகதி ஓர் கிளேறிக்கல் பரீட்சை நடத்தப்படும். அச்சோதனைக்குச் செல்லவிரும்புவோரின் கேள்விப்பத்திரங்கள் இந்தமாதம் பதினேந்தாந்திகதி செவ்வாய்க்கிழமை பகல் பன்னிரண்டுமணிக்குமுன் வித்தியாகர்த்தரிடஞ் சேரவேண்டும். மாதிரிக் கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொருதபாற்கந்தோரிலும் பெறக்கூடும். இச்சோதனையிற் பதினைந்துபேர்மாத்திரம் தெரிந்தெடுக்கப் படுவார்.

**மயேஷ்அம்மாள்.—Miss Myers.**—சென்ற ஐந்துவருடங்களாய் உடுவிற்பெண்பாடசாலையோடு சம்பந்தப்பட்டிருந்த இந்த அம்மாள் தம் வேலையைமுடித்துச் சென்ற புதன்கிழமை அமரிக்காவுக்குப் புறப்பட்டனர். ஏறக்குறைய ஒன்றரைவருடத்தின்முன் உடுவிற்பெண்பாடசாலையில் வேறாய் இங்கிலீஷு படிப்பிக்கும்படிக்கான ஒழுங்குகளேற்படுத்தி அப்பகுதியைத்தாமே நடாத்திவந்தனர். லேடி அவலக் கப்பலிற்செல்லுமிவர் கொழும்பில் வேறு கப்பலிலேறிக் கொங்கோங் வழியாய்ப் பாசிபிக் சமுத்திரத்தைக் கடந்து அமரிக்கா சேர்வர். சிந்தாயாத்திரையாய்ச் சுதேசமேகஞ் சேருவாராக.

**சனம். கேஸ்றிங்ஸ்ஐயர்.-Rev. R. C. Hastings.** சனம். கேஸ்றிங்ஸ்ஐயரும் பாரியாரும் மிஸ். மயேஷ் அம்மாளோடு கூடக் கொழும்புசெல்கின்றனர். மயேஷ்அம்மாளைக் கப்பலிலேற்றியனுப்பியபின் யாழ்ப்பாணந்திரும்புவர். இரண்டுமூன்றுமிஷனரிமாரின் வேலையைத தனியேநடத்துமிவர்க்கு இப்பிரயாணம் சற்றே இளைப்பாறுதலையும் சுகத்தையுங் கொடுக்குமென்பதற்கையமில்லை.

**விவாகம் — Marriage.**—பருத்தித்துறை ரேகுச்சிருப்பாயிருப்பவரும் மெஸ். வஸ்தியாம்பிள்ளை முதலியாரின் சகோதரனுமாகிய மெஸ். இ. பிரான்சிசுக்கும் மெஸ். மனுவேற்பிள்ளை இராசகாரியரின் புத்திரி மிஸ் எலிசபேத்துக்குமிடையிற் சென்ற திங்கட்கிழமை சமபிரமவிவாகம் நடந்தேறியது.

நேற்றைத்தினம் மானிப்பாய்த்தேவாலயத்திலோர் கிறிஸதவிவாகம் கைப்பிடிக்கப்பட்டது. மணவாளன் மானிப்பாய்வாசரான மெஸ். முருகேசரின்புத்திரன் மெஸ். சாமுவேல் செல்லப்பா. மணவாளி மெஸ். வேலுப்பிள்ளையின் புத்திரி மிஸ் எம்லி தங்கச்சியம்மா. விவாகஆராதனை சனம். நதானியேல் போதகரால் நடத்தப்பட்டது. கிறிஸ்த விவாகத்துட்படும் தம்பதிகள் தீர்க்காயுள்பெற்றுச் செழிக்க.

**மரணம்.—Obituary.**—அரசாட்சியாரின்கீழாய்த் தம்பனையில் உத்தியோகத்திருந்தவரும் சனம். சி. சி. கண்டிப்போதகரின்சகோதரனுமாகிய மெஸ். அல்விறெட் கன்டி சென்றமாதம் உஎ ந் திகதி காலஞ்சென்றனரெனக் கேள்விப்படுவது துக்கம்.

**மெஸ். பாட்லெற்.—Mr. D. B. Bartlett.**—யாழ்ப்பாண ஆபத்துக்குதவிவைத்தியசாலையிலிருந்து காலஞ்சென்றுபோன மெஸ். கந்தவனத்தினிடத்தில் மெஸ். பாட்லெற் அயிட்டிங்காய் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

